துறைமுகம் ஏற்படுத்தப்பட இருப்பதாலும் தங்களுக்கு திரிசூலத்திலேயுள்ள கற்குடைவு உள்ளிட்ட, மேலும் 3 கற்குடைவுகள் 10 ஆண்டு கால குத்தகை அடிப்படையிலே வேண்டுமெனக்கோரியிருக்கிறார். இது இப்பொழுது அரசின் பரிசீலனையிலே உள்ளது.

மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள, அன்னை இந்திரா கூட்டுறவுச் சங்கம், அண்ணா அரிஜன கருங்கல் ஜல்லி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், மீனம்பாக்கம் ஆதிதிராவிடர் குவாரி தொழிற் கூட்டுறவுச் சங்கம் போன்றவைகளுக்குக் குத்தகை வழங்க வேண்டுமென அந்தச்சங்கங்கள் தந்த மனுவினை அரசுக்கு அனுப்பியிருக்கிறார். இவற்றிலே இரண்டுக்கு ஏற்கனவே வேறு இடங்களிலே கல் குத்தகை வழங்கப்பட்டிருக்கிறது. துறைமுகப் பொறுப்புக் கழகம் அதனுடைய தேவைகளுக்காக மீண்டும் இதனைக் கோரி இருப்பதால் நாட்டு பொது நலனைக் கருத்திலே கொண்டு அவர்களுக்கே இதை வழங்கிவிடலாம் என்ற எண்ணமும் அரசுக்கு உள்ளது, மேலும் மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் பேசும்பொழுது, 500 லாரி கற்கள், 63 லட்சம்ரூபாய் கற்கள் எடுத்துச் சென்றதாக இங்கே கூறினார்கள். அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையில் சக்கைக் கற்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட காலத்தில் அதாவது 5-9-1989 முதல் 12-2-39 வரையிலும், பின்னர் தடைஆணை இருந்த 5 10-1989 முதல் 3-11-1989 வரையிலும், ஆக 37 நாட்களில் நாளொன்றுக்கு 500 லாரி கற்கள் எடுத்துச் செல்வது என்பது இயலாத செயல் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துத் தெரிவித்து உள்ளார்.

10-30 மணி

அது மாத்திரமல்ல நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, டாக்டர் கலைஞர் பேக்வர்டு கூட்டுறவுச் சங்கம் என்றும், டாக்டர் கலைஞர் தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவுச் சங்கம் என்றும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதைத் தெரிவித்த அவர், நல்லவேளையாக அந்தச் சங்கங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏதும் சலுகை செய்வதாகத் தெரிவிக்கவில்லை. நானும் அதுபற்றி விசாரிக்கச் சொன்னேன். எந்தச் சலுகையும் தரப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்குரிய விளக்கமாக இதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. விதி 110ன் கீழ் செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கைகள்

(அ) மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் ஒப்பந்தத் தொழிலாளர் பணி பற்றி உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே எழுப்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்! பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு அறிக்கைகளைப் படைப்பார்கள்.

மாண்புமிகு திரு கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்கள் கடந்த 2,3 நாட்களுக்கு முன்பு மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் தொழிலாளர்கள் ஒப்பந்தப் பிரச்சினை சம்பந்தமாக இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்குரிய பதிலை இந்த அவையின் முன்னால் வைக்கிறேன்.

''மணலியில் உள்ள மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் வேலை செய்த 1,100 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு 5-7-88 முதல் வேலை மறுக்கப்பட்டதாகவும், எம்.எப்.எல். பொதுத் தொழிலாளர் காண்ட்ராக்டர்ஸ் மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கமும் அந்தப் பிரச்சினையை எழுப்பியதாகவும் சொல்லப்பட்டது 10 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மீதும் தலைமை வேலை அளிப்பவர் எம்.எப்.எல். மீதும் கோரிக்கை எழுப்பப்பட்டது. தொழிலாளர் துறை இணை ஆணையாளர் (சமரசம்) முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்தபோது, பேச்சுவார்த்தையின் பயனால், தாம்கோஸ் என்சினியரிங் மற்றும் பி. ராமகிருஷ்ணன் ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களும் மேற்கண்ட தொழிற்சங்கமும் தொழிற்தகராறு சட்டம் 12 (3)-ன் கீழ் உடன்படிக்கையொன்றை, செய்து கொண்டனர். (1) டி.வி. இன்ஜினியரிங், (2) சக்தி எலெக்ட்ரிகல்ஸ், (3) ராஜ்கோ எலெக்ட்ரிக்கல்ஸ் ஆகிய ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக தொழிற் தகராறு இல்லை என்று சங்கம் பேச்சுவார்த்தையின் போது கூறியது. எனவே, இப்போதுள்ள பிரச்சினை பாரத் டிரான்ஸ்போர்ட் மற்றும் நான்கு ஒப்பந்தக்காரர்கள் தொடர்பானது, வேலை மறுப்புக்குக் காரணம் இல்லையென்றும், மீண்டும் வேலை அளிக்க வேண்டுமென்றும் சங்கம் கோரியது.

மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் நிறுவனத்திற்கும், பாரத் டிரான்ஸ்போர்ட் ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் 31-7-1987-ல் முடிவுற்றது என்றும், அதைப் புதுப்பிக்கவில்லை என்றும் நிர்வாகம் கூறியது. ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாமைக்குக் குறிப்பிட்ட காரணம், தொழிலாளர்களிடம் வேலை வாங்கும் திறன் இல்லை என்பதாகும். தொழிலாளர்கள் உற்பத்திக்கு எதிராக இருந்தார்கள் என்றும் கூறினர். உரத்தையும் மற்ற பொருட்களையும் ஏற்றிச் செல்கின்ற வாகனங்களைத் தொழிலாளர்கள் தடுத்தமையால் உற்பத்தியான பொருட்களை எடுத்துச் செல்ல பாதுகாப்பளிக்கவில்லை. அப்படி அளிக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆணை பெறப்பட்டது. 18-7-1988-ல் சங்கம் அந்த ஆணையைத் தற்காலிகமாக பெற்றதாகக் கூறியது. மேலும் 29-7-1988 முதல் ஒரு வாரத்திற்குப் புதிதாகத் தொழிலாளர்களை நியமிக்கக் கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் சங்கம் ஆணை பெற்றது. 8-3-1989 மற்றும் 20-6-1989 அன்று அரசு ஆணையர் மற்றும் செயலர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மீண்டும் தொழிலாளர் துறை இணை ஆணையர்

(சமரசம்) முன்னிலையில பேச்சுவார்த்தை நடந்தது. அவர், 29-9-1989 அன்று தொழிற் தகராறு சட்டம் 12 (4) பிரிவின் கீழ் அரசுக்கு அறிக்கை ஒன்றைக் கொடுத்தார். 1-12-1989 அன்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் முன் பேச்சுவார்த்தை நடந்தது. அதில் தொழிலாளர் துறை ஆணையரும் கலந்துகொண்டார். அதில் ஒரு பொதுப்படையான இசைவு ஏற்பட்டது. (அண்டர்டேக்கிங்)- அதைத் தொடர்ந்து தொழிலாளர் துறை ஆணையர் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார். இந்த ஒப்பந்தப்படி, தொழிலாளர்களுக்கு ஒப்பந்தம் முடிந்தபின்னர், பணிவழங்க அந்தச் சட்டத்தில் இடம்இல்லை. இந்தப் பிரச்சினையை விரைவில் அரசு தீர்த்து வைக்க அரசு தொழிலாளர் துறை தக்க அறிவுரை வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு சி. கோவிந்தசாமி அவர்கள் திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் பற்றி இங்கே கோரிக்கை எழுபபினார்கள். அதற்கான பதிலை இந்த அவையின் முன்னால் நான் வைக்கிறேன்.

(ஆ) திருப்பூர் பனியன் தொழிலாளர் நிலை பற்றி உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே எழுப்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு திரு கே,என்.நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் உள்ள மூவாயிரத்திற்கு மேற்பட்ட பனியன் தொழிற்சாலைகளில் 40 ஆயிரம் தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். அவற்றில் பனியன் ஏற்றுமதி செய்யும் பல நிறுவனங்களும் அடங்கும். இந்த நிறுவனங்கள், தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம், திருப்பூர் மற்றும் திருப்பூர் எக்ஸ்போர்ட் அசோசியேஷன் என்ற அமைப்புகளும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. அதில் உள்ள தொழிலாளர்கள், ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., எப்.பி.எப்., ஏ.டி.எம்.கே., ஐ.என்.டி.யு.சி., மற்றும் திருப்பூர் பனியன் பவர்லூம் பொதுத் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன. தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, மாறுபடும் பஞ்சப்படி, வீட்டுவாடகைப்படி, மிகை நேரப்படி, பயணப்படி, பெண் தொழிலாளர்களுக்கு திருமண உதவி போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து, அனைத்துத் தொழிற் சங்கங்களும். கூட்டாகத் தொழில் தகராறு எழுப்பி, 28-3-90 முதல் பொது வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தன. கோவை தொழிற் தகராறு அலுவலர் (சமரசம்) அவர்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். பேச்சுவார்த்தையின்போது தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கமும், திருப்பூர் எக்ஸ்போர்ட் அசோசியேஷனும் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட முடியாத நிலையில், அலுவலர்கள் தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து இந்த இரண்டு நிறுவனங்களின் சங்கங்களுடனும், தொழிலாளர் சங்கங்களுடனும் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். 21-3-1990 அன்று கோவை தொழிலாளர் அலுவலர்